தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண்.300/மா/2023
நாள் 19.09.2024

திரு.வி.பி.ரவிச்சந்திரன், — முறையீட்டு மனுதாரர்
திருப்பூர்

ஆணையர், — எதிர் மனுதாரர்.
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4சி என்கிற முகவரியில் வசிக்கும், திரு.வி.பி.ரவிச்சந்திரன் என்பவரின் 24.09.2023 நாளிட்ட மனு 03.10.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 300/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம், 4சி என்கிற முகவரியில் வசிக்கும், திரு.வி.பி.ரவிச்சந்திரன் என்பவர் தனது 24.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாநகராட்சியில் ரூபாய் 5.98 கோடி மதிப்பீட்டில் 4,443 மின்விளக்குகள், ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் 4,755 மின்விளக்குகள், ரூபாய் 17.51 கோடி மதிப்பீட்டில் 13,436 மின்விளக்குகள் பொருத்தும் புதிய பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது. நிதி ஒதுக்கீட்டின் வகையில் ஒரு விளக்கின் விலை ரூபாய் 12,741 ஆகிறது. தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகித பட்டியல் படி ஒரு விளக்கு ரூபாய் 772 என்று உள்ளது. ஒரு விளக்கிற்கு ரூபாய் 12,000/– வித்தியாசமாக உள்ளது.

2) திருப்பூர் மாநகராட்சியின் ஒவ்வொரு திட்டப் பணிகளிலும் ஊழல்களும் முறைகேடுகளும் நடந்து வருகின்றது எனவும், இந்தத் திட்டத்திலும் அவ்வாறு முறைகேடுகள் செய்வதை தடுக்கும் வண்ணம் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவின் மூலம் திட்ட ஆவணங்களின் நகல்களை சான்றிட்டு வழங்க கோரியதற்கு மாநகராட்சி பொது தகவல் அலுவலர் முறைகேடுகள் செய்வதால் தகவல்களை வழங்கவில்லை என்றும் மேல்முறையீட்டு மனுவிற்கும் பதில் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு மாநகராட்சி பணியாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

3) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 09.10.2023 நாளிட்ட அறிவிப்பு மற்றும் 25.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் திருப்பூர் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.

4) திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 07.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மின்சிக்கனத்தை பயன்படுத்த பல்வேறு வகையான மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றும் பணி இம்மாநகராட்சியில் நடைபெற்று வருகின்றது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கையில் LED மின்விளக்கு பிட்டிங்களின் விலை விகிதம் நிர்ணயம் செய்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. நடைபெற்று வரும் பணிகளுக்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி கூர்ந்தாய்வுக்குழு ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது" என தெரிவித்துள்ளார்.

5) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.08.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் 29.08.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"ரூபாய் 5.98 கோடி மதிப்பீட்டில் 4,443 மின் விளக்குகள், ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் 4,755 மின்விளக்குகள், ரூபாய் 17.51 கோடி மதிப்பீட்டில் 13,436 மின்விளக்குகள் பொருத்தும் பணி திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் புதிய பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது. தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகித பட்டியல்படி ஒரு விளக்கு ரூபாய் 772/– என்று உள்ளது. ஒரு விளக்கிற்கு சுமார் ரூபாய் 12,000/– வித்தியாசமாக உள்ளது. இந்த திட்டங்கள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி நான் கேட்டுள்ள ஆவணங்களை ஆணையம் பெற்று பரிசீலனை செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் மாநகராட்சியின் ஒவ்வொரு திட்டப் பணிகளிலும் ஊழல்களும் முறைகேடுகளும் நடந்து வருகின்றது. எனவே திட்டமிட்டு ஊழல் செய்யும் மாநகராட்சி பணியாளர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் போலியாக ஆவணங்கள் தயாரித்து ஊழல் செய்துள்ள அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) திருப்பூர் மாநகராட்சியில் உதவிப்பொறியாளராக பணியாற்றும் திரு.ஆறுமுகம் மற்றும் உதவி செயற்பொறியாளராகப் பணிபுரியும் திரு.செந்தில்குமார் ஆகிய இருவரும் 29.08.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"மனுதாரர் LED விளக்குகள் வாங்குவதில் பொதுப்பணித்துறையில் வெளியிடப்பட்ட விலைப்புள்ளியை பின்பற்றாமல் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் LED விளக்குகள் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையின்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கையின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அதன்படி பணிகள் நடைபெற்று வருகின்றது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் 11.5.2022 அன்று சுற்றறிக்கையில், ROC எண்.45490/2012/DOI நாள் 11.05.2022 LED பணிகள் மேற்கொள்ள தொழில் நுட்ப கமிட்டி தெரிவித்துள்ள விலை விகிதம் மற்றும் தொழில் நுட்ப விவரங்களின்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரக நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனை மாநகராட்சி தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்ட பொருள்களின் தரம் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரால் நியமிக்கப்பட்ட 3ஆம் தரப்பு ஆய்விற்கு பின்பே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று தெரிவித்துள்ளனர்.

8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் 07.08.2024 நாளிட்ட அறிக்கை மற்றும் திருப்பூர் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

9) மனுதாரர் திருப்பூர் மாநகராட்சியில் நடைபெறும் மின்விளக்குகள் பொருத்துவதில் முறைகேடு நடைபெற்றுள்ளது என்றும் இதற்கு பொறுப்பான அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

LED விளக்குகள் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையின்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதனை மாநகராட்சி தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்ட பொருள்களின் தரம் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரால் நியமிக்கப்பட்ட 3ஆம் தரப்பு ஆய்விற்கு பின்பே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அலுவலர்களின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதங்களின்படி 15வது நிதிக்குழு மானியம் 2022-2023ம் நிதி ஆண்டிற்கான Un Tied Grantல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தெருவிளக்குகளை கொள்முதல் செய்து பொருத்திக் கொள்ள திருப்பூர் மாநகராட்சிக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப அனுமதி தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தொழில் நுட்ப குழுவினரால் அனுமதியளிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட விலை மற்றும் விவரக்குறிப்பின்படி (Specification) LED தெருவிளக்குகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 ஐ பின்பற்றி கொள்முதல் செய்து பொருத்திக் கொள்ள வேண்டும். கொள்முதல் செய்ய வேண்டிய LED தெருவிளக்குகளின் விலை மற்றும் விவரக்குறிப்பு (Specification) 11.05.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு இருக்க வேண்டும். LED தெருவிளக்குகள் பொருத்தப்பட்ட விவரங்கள் மின்கம்பங்கள் வாரியாக முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள LED விளக்குகள் வாங்கப்பட்டதில் ஒரு விளக்கு ரூபாய் 12,000/- வித்தியாசமாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆணையர், திருப்பூர் மாநகராட்சி, அவர்கள் 11.05.2022 நாளிட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதம் மற்றும் தொழில் நுட்ப விவரங்களின்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரக நிர்வாக அனுமதி மற்றும்

தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதுடன் மாநகராட்சி தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நகராட்சி நிர்வாக இயக்குநரால் நியமிக்கப்பட்ட 3 ஆம் தரப்பு ஆய்வுக்கு பின்பு தான் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணையரின் அறிக்கையில் தெரிவித்து இருந்தாலும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்விளக்குகளுக்கான விலை, தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்துள்ள விலைக்கும் உள்ள வித்தியாசம் அதிகமாக உள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விலை குறித்து அண்ணா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் உள்ளடக்கிய, ஒரு தொழில் நுட்ப குழு அமைத்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையில் உள்ள விலை விகிதம் குறித்து மறு ஆய்வு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.வி.பி.ரவிச்சந்திரன்,
4சி, ஆகாஷ் இல்லம்,
பாளையக்காடு, திருப்பூர்–641 601.

2) ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இ.கோ / உதிரி

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

24/9/24

9/9